**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 29 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 11 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டு கடந்த 10 ஆண்டுகளாகச் சபையின் பயன்பாட்டிலிருந்துவரும் 04 வாகனங்கள் சபைக்குரித்தற்றனவாக இருந்தபோதிலும் அவற்றின் பெறுமதிகள் கூட்டுமொத்தம் ரூபா 1,211,040 நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மாகாண மற்றும் உள்@ராட்சி அமைச்சினது ரூபா இரண்டு மில்லியன் பெறுமதியான வேலைத்திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருந்த அன்னம்மாள் சனசமூக நிலையத்தினது புனரமைப்பு வேலைக்கான ஒப்பந்தகாரருக்கு சபை நிதியிலிருந்து வழங்கப்பட்டிருந்த முற்பணம் ரூபா 369,050 மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சிடமிருந்து நாளதுவரை பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

கொடுப்பனவுகளுக்கான சிட்டைகள் இலங்கை புகையிரத திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்றிராமையினால் கூட்டுமொத்தம் ரூபா. 58,455 இற்கு கணக்குகளில் ஏற்பாடு

செய்யப்பட்டிருந்த நேர்முன்னைய இரு வருடங்களுக்கான கொடுப்பனவுகள் நாளதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 158(1) | 645,129 | ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு செயலாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்று நிருபம் 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | | சபையின் 12 வாகனங்களிற்கு ஒரு வருட காலமாக எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்புமேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வடக்கு மாகாண நிதிச் சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PF/01/2017 ஆம் இலக்கம். | | 08 உத்தியோகத்தர்களிடம் பிணைப்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 28,623,466 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 28,387,662 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2016 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 101,800 | – | 100,907 | 645,129, | 101,000 | – | 99,948 | 628,008 |
| வாடகைகள் | 3,542,800 | – | 4,769,807 | – | 3,026,800 | – | 5,518,639 | – |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,627,900 | – | 1,452,349 | – | 1,665,000 | – | 1,315,818 | – |
| ஏனைய வருமானம் | 28,575,700 | – | 41,170,635 | 82,768,531 | 24,659,100 | – | 33,114,248 | 75,325,231 |
| | 33,848,200 | – | 47,493,698 | 83,413,660 | 29,451,900 | – | 40,048,653 | 75,953,239 |

(ஆ) சபையினால் வீதவரிகள் சேகரிப்பின் போது பட்டியல்கள் விநியோகிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் நிலுவைகளானவை மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டின் அடிப்படையில் திரண்டு வந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 2.2.2 வீதவரிகள்

மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய வீதவரி நிலுவை ரூபா 645,129 இனை அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 52,190,019 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள் மற்றும் பொதுவழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடையங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

### (அ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

கீரிமலையில் திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை.

(ii) கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டிருக்காமல் குவிக்கப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரித்தான நான்கு நூல்நிலையங்களது 629 நூல்நிலைய அங்கத்தவர்களிற்கான புதுப்பித்தல் நடவடிக்கைகளினை வருடாந்தம் மேற்கொள்வதற்கு சபை தவறியிருந்தது.

(ஆ) மக்களை வறுமையிலிருந்து விடுவித்தலை நோக்கமாகக் கொண்டு அதிமேதகு சனாதிபதி அவர்களின் முன்மொழிவொன்றின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டை வறுமையிலிருந்து விடுவிக்கும் ஆண்டாக பிரகடனப்படுத்தல் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டமைக்கு அமைவாக சபையினது மீளாய்வாண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்தில் ரூபா 75,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும் இத்திட்டத்தினை உரியவாறு நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

---

சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 06 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**3.4.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

---

மீளாய்வாண்டுக்கான வருடாந்த பொருட்கணிப்பீட்டுச் சபை அறிக்கையின் திருத்தியமைக்கப்பட வேண்டிய 03 இருப்பு உருப்படிகள் தொடர்பாக சபையினால் நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4.2 **பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை**

---

பழுதடைந்த நிலையிலிருந்த 02 குடிநீர் பவுசர்களினைத் திருத்தியமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 கையளிக்கப்படாத சொத்துக்கள்**

---

சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் நான்கு உழவு இயந்திரங்கள் சபைக்கு உரித்தற்றனவாகக் காணப்பட்டன.

**3.4.4 விளைவற்ற சொத்துக்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து தெல்லிப்பளையில் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு 15 திசெம்பர் 2014 அன்று கையளிக்கப்பட்டிருந்த ரூபா 3,694,656 பெறுமதியான கொல்களமானது கடந்த 03 வருடங்களாகக் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து வறுத்தலைவிளானில் நிர்மாணிக்கப்பட்டு 21 திசெம்பர் 2016 அன்று சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 6,567,550 பெறுமதியான மலக்கழிவுச் சுத்திகரிப்புக்கான கட்டடம் குறித்த நோக்கத்திற்காக நாளது வரை உபயோகிக்கப்படாதிருந்தது.

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத்திட்டம்**

சபையினால் மீளாய்வாண்டுக்கான வருடாந்த பெறுகைத்திட்டம் 2006 ஆம் ஆண்டு பெறுகை நூலின் பிரிவு 4.2 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 செயற்பாட்டுத் திட்டம்**

சபையினால் மீளாய்வாண்டுக்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 893 தொடக்கம் ரூபா 12,421,892 அல்லது 0.87 சதவீதம் தொடக்கம் 52.36 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 660 தொடக்கம் ரூபா 7,854,746 அல்லது 0.17 சதவீதம் தொடக்கம் 11.98 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| கணக்கீடு | ஆதன மதிப்பீட்டு பதிவேடு வியாபார உரிமக் கட்டணங்கள் பதிவேடு, நூலகப் புத்தகங்கள் பதிவேடு, அளவுத்தாள் பதிவேடு, காணி விற்பனை வரிப் பதிவேடு, வாகனப் பதிவேடு என்பன பராமரிக்கத் தவறியமை. |